14.10.2019
அசல் வழக்கு எண்:159-2016
வா.சா.1 கிருஷ்ணமூர்த்தி சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை

பிவா.சா.ஆ .1 ஆவணத்தின் அசல் வா.சா.ஆ15 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆவணமானது சொத்து விபரத்தில் கிழக்கு மாலில் பு. வீராயி, நாகம்மாள் என்பதை காண்பிப்பதற்காக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.15 ஆவணம் என்ன காரணத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லவில்லை என்றால் மூல ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது வா.சா.ஆ.15 ஆவணம் பற்றி பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் நிருபணவாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்வழக்குரையில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டுதான் வா.சா.ஆ.15 ஆவணம் குறியீடு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சொத்திற்கு அடுத்து உள்ள இடங்கள் என்ன உள்ளதோ அதைதான் நான்குமாலில் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் பிவா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.15 ஆவணங்களில் நான்குமால் விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆவணத்தில் கண்ட நாகம்மாள் வகையறாவிடமிருந்து எனது முன்னோர்களுக்கு சொத்து பறிமாற்றம் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எனது தகப்பனார் பெயருக்கு பட்டா பாஸ்புத்தகம் வழங்கப்பட்டதா என்றால் பட்டா வழங்கப்பட்டுள்ளது. எனது தகப்பனாருக்கு 1950ம் ஆண்டு பட்டா வழங்கப்பட்டது வட்டாசியரும் வருவாய் கோட்டாசியரும் சேர்ந்து வழங்கியதாகும். வா.சா.ஆ.20ல் மாவட்ட வருவாய் அதிகாரி உத்தரவில் தாவா சொத்துக்கான பட்டா எனது தகப்பனார் பெயரில் யுடிஆர் காலத்தில் தவறாக பட்டா ஏற்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.20ஐ பொறுத்து இவ்வழக்கில் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல பரிகாரம் கோரியுள்ளேன். வா.சா.ஆ.20ல் ச.எண்248-4ல் கண்ட 92 செண்டுக்குரியது என்றால் சரிதான். நான் இநத வழக்கில் ச.எண் 248-4ல் கண்ட 15 செண்டை பொறுத்து பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கே எனது சகோதரர் நாகராஜனுக்கு பாகபிரிவினையில் ஒதுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் அது ச..எண் 248-4ல் கண்ட மொத்த சொத்தில் தான் உள்ளடங்கியது ௭னறால் சரிதான். ச.எண்248-4ல் கண்ட 92 செண்டு சொத்திற்கு பிரதிவாதிகள் பெயரில் பட்டா உள்ளதை எனது சகோதரர்கள் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான் சென்னையில் உள்ளனர். எனது சகோதரர்களுக்காக நான் இந்த வழக்கை நடத்தவில்லை நாகராஜன் காலமாகிவிட்டார். அவரது வாரிசுகள் மேல்நடவடிக்கை செய்யவில்லை என்றால் சரிதான்.

ச.எண்248-4ல் கண்ட 92 செண்டு நிலம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என ஒப்புக்கொண்டுள்ளதால் நாகராஜனின் வாரிசுகள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு தாக்கல் செய்தபோது எனது சகோதரர்களின் வாரிசுகளை நடவடிக்கைக்கு வரும்படி கேட்கவில்லை என்றால் கேட்டேன். எனது தகப்பனார் பெயருக்கு 1972ம் வருடம் ச.எண்248-3ல் கண்ட சொத்திற்கு பட்டா பாஸ்புத்தகம் வழங்கப்பட்டது என்றும் அதனை நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. யுடிஆர் காலத்தில் ஏற்பட்ட தவறான பட்டாவை ஆதாரமாக கொண்டு வருவாய் ஆவணங்களை பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. திருமங்கலம் வட்டாசியரின் விசாரணையின் போது ச.எண்248-4ல் கண்ட சொத்திற்கு தவறுதலாக பட்டா மாற்றம் செய்துள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. 1996ம் வருடம் திருமங்கலம் வட்டாசியர் விசாரணைக்கு பிறகு பிரதிவாதிகள் பெயரில் பட்டா வழங்கினார்கள் என்றால் சரிதான். உரிய காலத்திற்குள் திருமங்கலம் வட்டாசியரின் உத்தரவை ஆட்சேபிக்காமல் 2007ம் ஆண்டு வட்டாசியரின் உத்தரவை ஆட்சேபித்து உசிலம்பட்டி வட்டாசியரிடம் மேல்முறையீடு செய்தேன் என்றால் சரியல்ல 2007ம் ஆண்டுதான் எனக்கு தெரிந்தது. 2007ம் ஆண்டுதான் கவனத்திற்கு வந்தது என்று பொய்யாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உசிலம்பட்டி வருவாய் கோட்டாசியரிடம் தாக்கல் செய்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு மதுரை மாவட்ட வருவாய் அதிகாரியடம் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அது மீண்டும் உசிலம்பட்டி வருவாய் கோட்டாசியரிடம் மறுவிசாரணைக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். உசிலம்பட்டி வருவாய் கோட்டாசியர் மறு விசாரணையில் ஏற்பட்ட உத்தரவை ஆட்சேபித்து பிரதிவாதிகள் மாவட்ட வருவாய் அதிகாரியிடம் மேல்முறையீடு செய்தார்கள் என்றால் சரிதான் 26.4.2016ல் மாவட்ட வருவாய் அலுவலர் என் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்து பிரதிவாதிகள் பெயரில் உத்தரவிட்டார். மாவட்ட வருவாய் அதிகாரியின் உத்தரவை நான் படித்துபார்த்துள்ளேன் மாவட்ட வருவாய் அதிகாரியின் உத்தரவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாவட்ட வருவாய் அதிகாரியின் உத்தரவில் பிவா.சா.ஆ.1 ஆவணத்தை உசிலம்பட்டி வருவாய் கோட்டாசியர் சரியாக கவனிக்கவில்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ச.எண்.248-4ல் கண்ட் சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதென மாவட்ட வருவாய் அதிகாரியின் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அது தவறானது. மாவட்ட வருவாய் அதிகாரி பிறப்பித்த உத்தரவை செல்லாது என எந்த பரிகாரமும் பிராதில்

கோரவில்லை என்றால் சரியல்ல. ச.எண்248-4ல் கண்ட 92 செண்டு நிலம் பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வந்து பிரதிவாதிகள் ˙ பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு உரிய 1950ம் ஆண்டுக்கு முன் உள்ள ஆவணங்களை வழக்கிற்காக வேண்டுமென்றே மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனது அனுபவத்தை பிரதிவாதிகள் எப்போது அடை இடஞ்சல் செய்தார்கள் என்றால் பாகபிரிவினை செய்த பிறகு தடை இடஞ்சல் செய்தனர். பாகபிரிவினை செய்த வடரும் 1993 என்றால் சரிதான். 1993 ம் வருட பாகபிரிவினையில் எங்களுக்கு சம்பந்தம் இல்லாத சொத்தையும் சேர்த்து பாகபிரிவினை செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக அனுபவம் செய்துவந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

மறுவிசாரணை- இல்லை